ஜாதிய வன்கொடுமை: கடும் நடவடிக்கை எடுப்பதில்லை

சென்னை, ஏப்.29: ஜாதிய வன்கொடுமைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படாததே, குற்றங்கள் தொடர்வதுக்கு காரணமாக அமைந்திருப்பதாக தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் 'எக்ஸ்' தளத்தில் புதன்கிழமை வெளியிட்ட பதிவு: புதுக்கோட்டை மாவட்டம் கொளத்தூர் வட்டம் நடுப்பட்டி பகுதியில் விளிம்புநிலை சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர் ஹரிஹரனின் மரணம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. காதல் தொடர்பு காரணமாக சமூக மற்றும் ஜாதிய அழுத்தங்களுக்கு உள்ளாகி, அவர் உயிரிழந்துள்ளார் என்பது மிகவும் கண்டனத்திற்குரியது. இது, மனிதநேயத்துக்கும், சமத்துவக் கொள்கைக்கும் எதிரான கொடூர செயலாகும்.

இத்தகைய சம்பவங்கள் நாகரிக காலத்தில் தற்போதும் நிகழ்வது நம் சமூகத்தின் பின்னடைவை வெளிப்படுத்துகிறது. இளைஞர்கள் மீது நடத்தப்படும் ஜாதிய வன்கொடுமைகள், சமூக நீதிக்கு விடுக்கப்படும் பெரும் சவாலாகும்.

இத்தகைய கொடூர செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படாததே, இத்தகைய குற்றங்கள் தொடர்வதுக்கு காரணமாக அமைகிறது.

இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் மீது வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் மற்றும் தற்கொலைக்கு தூண்டுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இவ்வாறு ஜாதி அடிப்படையிலான அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகளை தடுக்கும் வகையில் அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இளைஞர்களின் வாழ்க்கையை பாதுகாக்கும் பொறுப்பு சமுதாயத்துக்கும் அரசுக்கும் உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரம்: பிரதமர் பேச்சு ஏற்புடையதல்ல



சென்னை, ஏப். 29: தொகுதி மறுசீரமைப்பு குறித்து மாநிலங்களுக்கிடையே மோதல் ஏற்படுத்தும் வகையில் பிரதமர் மோடி பேசுவது ஏற்புடையதல்ல என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை: உத்தர பிரதேசத்தில் கங்கா விரைவு நெடுஞ்சாலையை திறந்து வைத்து பேசிய பிரதமர் மோடி, உத்தர பிரதேசத்துக்கு அதிக மக்களவை தொகுதிகள் கிடைப்பதை திமுக எதிர்ப்பதாகவும் , உத்தர பிரதேசத்தை இழிவுபடுத்தும் திமுகவுடன் சமாஜவாதி கட்சி கூட்டணி வைத்துள்ளதாகவும் பேசியுள்ளார்.

பிரதமர் மோடி அரசியல் உள்நோக்கத்துடன் திமுக எதிர்ப்பு வெறுப்பு அரசியல் பேசியுள்ளார். இத்தகைய பேச்சு இரு மாநில மக்களிடையேயான நல்லுறவைப் பாதிக்கும் என்பதை உணராமல் பிரதமர் பேசியுள்ளார்.

இது மாநில மக்களிடையே மோதல்களை உருவாக்குவதுடன், நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டுக்கு எதிராகவும் அமையும். உத்தர பிரதேச மாநிலத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அந்த மாநிலத்தில் பாஜகவின் வாக்குவங்கியை அதிகரிப்பதற்காக பிரதமர் மோடி இவ்வாறு பேசியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார் மு.வீரபாண்டியன்.

சென்னை திரும்பினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னைக்கு தனிவிமானத்தில் பயணிப்பதற்காக கொடைக்கானலிலிருந்து காரில் புதன்கிழமை மதுரைக்கு புறப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின்.

கொடைக்கானல்/திருப்பரங்குன்றம், ஏப். 29: கொடைக்கானலில் 4 நாள்கள் ஓய்வுக்குப் பிறகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை கார் மூலமாக மதுரைக்கு வந்து, அங்கிருந்து தனி விமானத்தில் சென்னைக்கு சென்றார்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலுக்கு கடந்த 25-ஆம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்தினருடன் ஓய்வெடுப்பதற்காக வந்தார். அவர் கொடைக்கானல் பாம்பார்புரம் பகுதியிலுள்ள தனியார் நட்சத்திர விடுதியில் தங்கியிருந்தார்.

கடந்த 3 நாள்களாக அவர் கொடைக்கானல் ஏரிச் சாலை, நகராட்சி நீர்த்தேக்கம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபயிற்சியும், ஏரிச் சாலைப் பகுதியில் மிதிவண்டியும் ஓட்டினார்.

4 நாள்கள் ஓய்வுக்குப் பிறகு, முதல்வர் மு.க. ஸ்டாலின் கொடைக்கானலிலிருந்து காரில் மதுரைக்குப் புறப்பட்டார். அப்போது, தங்கும் விடுதியின் முன் கூடியிருந்த பொதுமக்கள் முதல்வருடன் புகைப்படம் எடுத்தனர். இதையடுத்து, கொடைக்கானல் - வத்தலக்குண்டு மலைச் சாலையில் சென்ற போது மூஞ்சிக்கல், உகார்த்தேநகர், செண்பகனூர், பெருமாள்மலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொதுமக்களிடமிருந்து முதல்வர் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர், அவர் பகல் 12.50 மணிக்கு மதுரைக்கு வந்தார். இதைத்தொடர்ந்து, பிற்பகல் ஒரு மணிக்கு தனி விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக, மதுரை விமான நிலையத்தில் அவருக்கு மீண்டும் திமுக ஆட்சி 2.0 தொடர வேண்டும் என்ற கேடயத்தையும், அசோக முத்திரையையும் கட்சியினர் பரிசாக வழங்கினர்.

வழக்குரைஞராக பேரறிவாளன் பதிவு: காங்கிரஸ் கண்டனம்; பார் கவுன்சில் விளக்கம்

சென்னை, ஏப். 29: பேரறிவாளன் வழக்குரைஞராகப் பதிவு செய்ததில் எந்த விதிமீறலும் இல்லை என்று பார் கவுன்சில் உறுப்பினரும், வழக்குரைஞர் பதிவுக் குழு தலைவருமான கே.பாலு விளக்கம் அளித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைப் பெற்ற பேரறிவாளன், சட்டப் படிப்பை முடித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்குரைஞராகப் பதிவு செய்தார். இந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் எம்.பி.யும், வழக்குரைஞருமான ஆர்.சுதா கூறியதாவது:

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளி பேரறிவாளன், வழக்குரைஞராகப் பதிவு செய்த நாள் ஒரு கருப்பு நாள். இதற்காக பார் கவுன்சில் உறுப்பினர்களைக் கண்டிக்கிறேன்.

பேரறிவாளனை வழக்குரைஞராகப் பதிவு செய்ய அனுமதித்தது தவறான முன்னுதாரணம். இது குறித்து குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோருக்கு புகார் மனு அனுப்பி உள்ளேன். எனவே, பேரறிவாளன் வழக்குரைஞர் பதிவை திரும்பப் பெற பார் கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இது குறித்து பார் கவுன்சில் உறுப்பினரும், வழக்குரைஞர் பதிவுக் குழு தலைவருமான கே.பாலு அளித்த விளக்கம்:

குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றவர் வழக்குரைஞராகப் பதிவு செய்வது இது முதல்முறை அல்லை. ஏற்கெனவே, பார் கவுன்சிலில் வழக்குரைஞராகப் பதிவு செய்து வழக்குரைஞராக பலர் பணியாற்றுகின்றனர்.

வழக்குரைஞர்கள் சட்டப் பிரிவுகளின்படி, ஒருவர் குற்றவாளியாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு அதற்குரிய தண்டனையை அனுபவித்து முடித்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வழக்குரைஞராகப் பதிவு செய்யலாம் எனக் கூறுகிறது.

பேரறிவாளனின் ஆவணங்கள் பார் கவுன்சிலின் வழக்குரைஞர் பதிவுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அதன் பிறகே வழக்குரைஞராகப் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டார். இதில் எந்த சட்ட விதிமீறலும் இல்லை என்று கூறினார்.

எல்லை தாண்டினால் மீனவர்களை எச்சரிக்கும் 'ஏர்ஷிப்' தொழில்நுட்பம் !

நாகை கடலில் பரிசோதனை

நாகையில் கடலில் மேற்கொள்ளப்பட்ட ஏர்ஷிப் மாதிரி பரிசோதனை.

நாகப்பட்டினம், ஏப். 29: தமிழக மீனவர்கள் கடலில் எல்லை தாண்டினால் எச்சரிக்கை விடுக்கும் ஏர்ஷிப் தொழில்நுட்ப மாதிரி பரிசோதனை நாகை கடலில் புதன்கிழமை நடைபெற்றது.

நாகை மாவட்டத்தில் மீன்பிடித் தொழில் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக இருந்து வருகிறது.

மாவட்டத்தில் வேதாரண்யம், கோடியக்கரை, நாகை, உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இந்திய எல்லையை தாண்டி வந்து மீன் பிடிப்பதாகக் கூறி, இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றனர். மீனவர்கள் கைது செய்யப்படுவது, படகுகள் பறிமுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் இலங்கை கடற்படை ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில்,மீனவர்கள்கடலில் எல்லை குறித்து அறிந்து கொள்ளவும், மீனவர்களின் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் துல்லியமாக தொடர்புகொள்ளும் வகையில், பொறியியல் பயின்ற மாணவர்கள் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.

பொறியாளர்களான லோகேஸ்வரன், ஹரிகரன், பார்வதி, ஹரிகரமாதவன், ஸ்ரீகாந்த், சீனிவாசன், திலகம் பார்வதி நாதன், கற்பகநாதன், பிரெத்யும்னா, பரத் கண்ணா, ரவிக்குமார் ஆகியோர் தாங்கள் உருவாக்கியுள்ள ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் மூலம் இதற்கான மாதிரி பரிசோதனையை நாகை கடலில் புதன்கிழமை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

இதுகுறித்து மாணவர்கள் கூறியது:

தமிழக மீனவர்கள் எல்லையை அறிந்துகொள்வது, அவசர காலங்களில் கடலில் இருந்து கரைக்கு தொடர்புகொள்வது சவாலாக உள்ளது. அதேபோல இந்திய கடல் எல்லைக்குள் ஊடுருவலைத் தடுப்பதும் கடலோரக் காவல்படை, கடற்படையினருக்கு சவாலாக உள்ளது.

எனவே, இப்பிரச்னைக்குத் தீர்வாக புதிய கண்டுபிடிப்பை உருவாக்கியுள்ளோம். இதன்படி, அலுமினியம் மற்றும் நெகிழி போன்ற பொருள்களால் விமானம் போன்ற ஏர்ஷிப் அமைப்பு உருவாக்கப்பட்டு, அதில் நிரப்பப்பட்டுள்ள ஹீலியம் வாயு மூலம் வானத்தில் 20 கி.மீ. தொலைவில் நிலை நிறுத்தப்படும். இந்த அமைப்பு சூரிய சக்தியால் தொடர்ந்து இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உயர் சக்திமிக்க கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த ஏர்ஷிப் 200 கி.மீ. சுற்றளவில் 24 மணி நேரமும் கண்காணிப்பை மேற்கொள்ளும்.

இந்திய கடல் எல்லைக்குள் சிறிய அசைவோ, ஊடுருவலோ இருந்தாலும் உடனடியாக படங்களை செயற்கைக்கோளுக்கும், தரையில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கும் உடனடியாக அனுப்பிவிடும்.

மேலும் எல்லை தாண்டும் மீனவர்களின் கைப்பேசிகளுக்கு எல்லை குறித்து எச்சரிப்பது, மீனவர்கள் தரைப்பகுதியைத் தொடர்புகொள்ள தொலைத் தொடர்பு வசதி உருவாக்குவது உள்ளிட்டவற்றை மேற்கொள்ளும். இது மீனவர்களுக்கு மட்டுமின்றி கடலோரக் காவல்படை, கடற்படைக்கும் உதவிகரமாக இருக்கும். முதல்கட்டமாக நாகையில் நடுக்கடலில் வைத்து மாதிரி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வெற்றியடைந்துள்ளது.

இந்த திட்டத்துக்கு தமிழக அரசும் மத்திய அரசும் ஆதரவும், நிதியுதவியும் அளித்துள்ளன. மாதிரி பரிசோதனை வெற்றியடைந்துள்ள நிலையில் அடுத்தகட்டமாக நாகையில் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன்மூலம் நாகை மீனவர்களுக்கு பல்வேறு தொழில்நுட்ப உதவிகள் கிடைக்கும் என்றனர்.

வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் பாதுகாப்பு தேவை: தவெக

சென்னை, ஏப்.29: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் நாளான மே 4-இல், வாக்கு எண்ணிக்கை மையங்களில் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழக வெற்றிக்கழகம் சார்பில் தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தவெக இணைப் பொதுச் செயலர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், துணை பொதுச்செயலர் ராஜ்மோகன் ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கை சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர்.

தொடர்ந்து, சி.டி.ஆர். நிர்மல்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தபால் வாக்குகள் குறித்து முறையான பதிவேடு பின்பற்றப்பட வேண்டும். அனைத்து தபால் வாக்குகளையும் எண்ம (டிஜிட்டல்) முறைபடுத்தப்படுவதோடு, அவை எண்ணப்படுவதை காணொலியாக ஆவணப்படுத்தி முடிவுகள் வெளியான பின்னர் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கிடம் கோரிக்கை வைத்தோம்.

மேலும், வாக்கு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணி முடிப்பதற்கு முன்பாகவே, தபால் வாக்குகளை எண்ணி முடிக்க வேண்டும். அதேபோல், வாக்கு எண்ணும் தினத்தில், வாக்கு எண்ணும் மையங்களில் குளறுபடிகள் செய்ய திமுக திட்டமிட்டுள்ளது.

ஆகையால், வாக்கு எண்ணும்மையங்களுக்குகாவல்துறையுடன் மத்திய பாதுகாப்பு படைகளையும்சேர்த்துபாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரினோம். எங்கள் கோரிக்கைகள் அனைத்தும் செயல்படுத்தப்படும் என தலைமைத் தேர்தல் அதிகாரி உறுதியளித்தார் என்றார் அவர்.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்த பனைத் தொழிலாளி தனியார் மருத்துவமனைக்கு மாற்றம்

தூத்துக்குடி, ஏப். 29: ஆலங்குளம் காவல் உதவி ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டதில் காயமடைந்த பனைத் தொழிலாளி, தூத்துக்குடி தனியார் மருத்துவமனையில் புதன்கிழமை அனுமதிக்கப்பட்டார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே உள்ள மருதம்புத்தூரைச் சேர்ந்த பெருமாள் சேட் மகன் மணிகண்டன். பனைத் தொழிலாளியான இவரை, அண்மையில் ஆலங்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் இசக்கிராஜா துப்பாக்கியால் இரு கால்களிலும் சுட்டார். இதில் பலத்த காயமடைந்த மணிகண்டன், தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அங்கு அவருக்கு சரியான முறையில் சிகிச்சை அளிக்கவில்லை எனக் கூறி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் ஆணை பெற்று தூத்துக்குடி வழக்குரைஞர் சிலுவை முயற்சியில், தற்போது தூத்துக்குடி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, நாடார் சமூக அமைப்புகள் உள்பட பல்வேறு அமைப்பினர் இணைந்து, மணிகண்டன் சிகிச்சை செலவு முழுமையும் ஏற்றுக்கொள்ள உள்ளதாகவும், அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் வழக்குரைஞர் சிலுவை தெரிவித்தார்.

காவல் துறை ரோந்து வாகனம் கடத்தல்: கேரள இளைஞர் கைது

சென்னை, ஏப். 29: சென்னை சென்ட்ரலில் காவல் துறை ரோந்து வாகனத்தைக் கடத்தியதாக கேரள இளைஞர் கைது செய்யப்பட்டார்.

சென்னை பெரியமேடு போலீஸார் ரோந்து வாகனத்தில் சென்ட்ரல் ரயில் நிலையப் பகுதியில் புதன்கிழமை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது, புறநகர் ரயில் நிலையம் பகுதியில் ரோந்து வாகனத்தை நிறுத்திவிட்டு, சிறிது தொலைவில் நின்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த நேரத்தில், அங்கு மது போதையில் வந்த ஒரு இளைஞர், ரோந்து வாகனம் சாவியோடு நிற்பதைப் பார்த்து, அந்த வாகனத்தை அங்கிருந்து ஓட்டிச் சென்றார். சிறிது நேரம் கழித்து இதைக் கவனித்த போலீஸார், வாகனம் இல்லாததைப் பார்த்து உடனே வாக்கிடாக்கி மூலம் அந்தப் பகுதி முழுவதும் போலீஸாரை உஷார்படுத்தினர். இதனால் சென்ட்ரல் பகுதியில் போலீஸார் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். போலீஸார், வேறொரு வாகனத்தில், அந்த வாகனத்தை விரட்டிச் சென்றனர். இதற்கிடையே ரோந்து வாகனத்தை கடத்திய நபர், சென்னை மருத்துவக் கல்லூரி சிக்னல் பகுதியில் சென்றபோது விபத்தில் சிக்கினார். அந்த ரோந்து வாகனம் முன்னே சென்ற வாகனங்கள் மீது மோதியது.

இதில் அம்பத்தூர் அயனம்பாக்கத்தைச் சேர்ந்த சீ.மகேஷ் (45) உள்பட 2 பேர் காயமடைந்தனர். அங்கு, போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் பணியில் இருந்த போக்குவரத்து போலீஸார், காவல் துறை ரோந்து வாகனத்தை கடத்தி வந்த இளைஞரைப் பிடித்து பெரியமேடு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

போலீஸார், அந்த இளைஞரிடம் விசாரித்ததில் அவர், கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்த ஜோ.லிஜோ ஜோசப் (33) என்பதும், சென்னை பல்லாவரம் பொழிச்சலூர் பகுதியில் தங்கியிருந்து தண்ணீர் கேன் வியாபாரம் செய்து வருவதும் தெரிய வந்தது. இதையடுத்து, போலீஸார் வழக்குப் பதிவு செய்து, லிஜோ ஜோசப்பை கைது செய்தனர்.

இந்தியன் வங்கி

மண்டல அலுவலகம் : புதுச்சேரி
66/4, கிழக்கு கடற்கரை சாலை,
பாக்கமுடையான்பேட்டை, புதுச்சேரி–605008.
Ph : 0413-2257139

டெண்டர் அறிவிப்பு (ஆன்லைன் டெண்டர்)

இந்தியன் வங்கியின் INDSETI புதிய கட்டடத்திற்கு "V.மருதூர் விழுப்புரம்–605602" என்ற அமைவிடத்தில் தரைத்தளம் + முதல்தளம் (G+1 INDSETI) கட்டிடம் கட்டித்தரக்கூடிய மதிப்பு வாய்ந்த ஒப்பந்ததார நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஏலப்புள்ளி முறையில் (தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலப்புள்ளி) இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் (e-டெண்டர்) வரவேற்கப்படுகிறது. டெண்டர் மதிப்பு ரூ.408.38 லட்சங்கள் மற்றும் GST பொருந்தும். ஆன்லைன் ஏலம் மூலம் டெண்டரை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் 25.05.2026, 15:00 மணிவரை. மேலும் விவரங்களுக்கு
https://indianbank.bank.in/tenders/ and
https://www.tenderwizard.com/INDBANK/
ஆகிய எமது இணையதளங்களை பார்வையிடுவீர்.

இந்த ஒப்பந்தப்புள்ளி தொடர்பான அனைத்து விதமான கூடுதல் அறிவிப்புகள் திருத்தங்கள் அல்லது சேர்க்கைகள் ஏதேனும் இருந்தால் எமது மேற்கண்ட இணையதளத்தில் வெளியிடப்படும். டெண்டர் நடைமுறைகள் நிகழும் காலகட்டத்தில் இந்த இணையதளங்களை தொடர்ந்து பார்வையிடுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மண்டல மேலாளர்

அறிவிப்பு | UNIFI MUTUAL FUND

தணிக்கை செய்யப்படாத அரை ஆண்டு நிதி அறிக்கை வெளியீடு - Unifi பரஸ்பர நிதித் திட்டங்களின் முடிவுகள்

Unifi மியூச்சுவல் ஃபண்டின் ("ஃபண்ட்") திட்டங்களின் முதலீட்டாளர்(கள்) / யூனிட் ஹோல்டர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (மியூச்சுவல் ஃபண்ட்ஸ்) ஒழுங்குமுறைகள், 1996-இன் ஒழுங்குமுறை 59-இன் படியும், ஜூன் 27, 2024 தேதியிட்ட செபி மாஸ்டர் சுற்றறிக்கை எண். SEBI/HO/IMD/IMD-PoD-1/P/CIR/2024/90-இன் பத்தி 5.3-ஐயும் சேர்த்துப் படிக்கையில், மார்ச் 31, 2026-இல் முடிவடைந்த அரையாண்டிற்கான ஃபண்டின் திட்டங்களின் அரையாண்டு தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள், ஃபண்டின் இணையதளமான www.unifimf.com-இல் பதிவேற்றப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் நிதித் திட்டத்தின் முடிவுகளை வலைத்தளத்திலிருந்து பார்க்கலாம்/பதிவிறக்கம் செய்யலாம்.

Unifi அசெட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட்க்காக,
(Unifi மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்

இடம்: சென்னை
தேதி: ஏப்ரல் 30, 2026

For more information please contact:
Unifi Asset Management Private Limited
(Investment Manager for Unifi Mutual Fund)
CIN: U66309TN2024PTC166661

Regd. Office: 11, Kakani Towers, 15, Khader Nawaz Khan Road, Nungambakkam, Chennai – 600006
Toll Free No.: 1800-309-2833
E-mail: services@unifimf.com
Website: www.unifimf.com

Mutual Fund Investments are subject to market risks, read all scheme related documents carefully.

Change of Name

I, **BALAJI KASILINGAM PANDIARAJAN,** S/o. PANDIARAJAN, born on **20.01.1991** (Native District : **THANJAVUR**), residing at No.732, Vellalar Theru, Ayyavadi, Kumbakonam Taluk - 612 204, Thanjavur District, Tamil Nadu, shall henceforth be known as **BALAJI PANDIARAJAN.**

BALAJI KASILINGAM PANDIARAJAN
Ayyavadi, 29.04.2026.

Change of Name

I, MALINI ILANGOVAN, residing at No.316A, Vadakkur Amman Koil Street, Manamelkudi PO., & Tk., Pudukkottai District - 614620, shall henceforth be known as **MALINI NEELAKANDAN.**

MALINI ILANGOVAN
Aranthangi, 29.04.2026.

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.05.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கரூர், கரூர், 0101290700052703, தாந்தோணிமலை கரூர், 0120060700055130, 0218, பெரம்பலூர், பஜார் வீதி ஜெயங்கொண்டசோழபுரம், 0102650700789124, தஞ்சாவூர், ஒரத்தநாடு தஞ்சாவூர், 0129600700048885, தஞ்சாவூர், 0102900700059162, திருநாகேஸ்வரம் தஞ்சாவூர், 0121030700049091, திருப்பணந்தல் , 0121670700049619, 0121670730011260, திருவாரூர், கூத்தநல்லூர், 0130900730014953, 7138, நிடாமங்கலம், 0101870700758181, திருச்சி, புள்ளம்பாடி திருச்சி, 0121230730015208, வையம்பட்டி திருச்சி, 0117050700048552,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வமுள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை -9

தமிழ்நாடு அரசின் 6 ஆண்டுகால பிணையப் பத்திரம், தமிழ்நாடு அரசின் 10 ஆண்டுகால பிணையப் பத்திரம் மற்றும் தமிழ்நாடு அரசின் 15 ஆண்டுகால பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூ.3000 கோடி** மதிப்பில் **ரூ.1000 கோடி** மதிப்புள்ள **6 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம், ரூ.1000 கோடி** மதிப்புள்ள **10 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம்,** மற்றும் **ரூ.1000 கோடி** மதிப்புள்ள **15 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம்** ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் **ரூ.10,000/–**க்கும் அதன் பின்னர் **ரூ.10,000/–**ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **மே 5, 2026** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.

2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் இணைப்பு–IIன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலக் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.

3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **மே 5, 2026** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:

அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.00** மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.

4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.

5. ஏலத்தின் முடிவுகள் **மே 5, 2026** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **மே 6, 2026** அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

6. **தமிழ்நாடு அரசின் 6 ஆண்டுகால பிணையப் பத்திரம், 10 ஆண்டுகால பிணையப் பத்திரம் மற்றும் 15 ஆண்டுகால பிணையப் பத்திரம்** ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை **நவம்பர் 06** மற்றும் **மே 06** ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.

7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.

8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **ஏப்ரல் 29, 2026 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண். 946(L)/W&M-II/2026, எண். 947(L)/W&M-II/2026** மற்றும் **எண். 948(L)/W&M-II/2026** –ஐக் காண்க.

த. உதயச்சந்திரன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை–9.

செ.ம.தொ.இ./ 340 /வரைகலை/2026

அறிவிப்பு | சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் அரையாண்டு தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள்

SEBI (மியூச்சுவல் ஃபண்ட்) விதிமுறைகள், 1996 இன் விதி 59 இன் படி, ஜூன் 27, 2024 தேதியிட்ட செபி முதன்மை சுற்றறிக்கை எண் SEBI/HO/IMD/IMD-PoD-1/P/CIR/2024/90-ஐயும் சேர்த்துப் படிக்கையில், சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் மார்ச் 31, 2026-இல் முடிவடைந்த அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள், சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட் (AMC)-இன் இணையதளமான www.sundarammutual.com-இல் பதிவேற்றப்பட்டுள்ளன என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

அதன்படி, முதலீட்டாளர்கள் AMC-யின் இணையதளத்திலிருந்து முடிவுகளைப் பார்க்கலாம் அல்லது பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

யூனிட் வைத்திருப்பவர்கள் தங்களின் பான் (PAN), கேஒய்சி (KYC) விவரங்கள், மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண், மற்றும் நாமினி தகவல்களை AMC-யில் புதுப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், தங்களின் பான் எண் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதையும் அவர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: ஏப்ரல் 30, 2026

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாட்டு இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.